சுருக்கம்

கலையும் பண்பாடும் – இமாசலப் பிரதேசம், குல்லு தசரா விழா – 19.10.2018 முதல் 25.10.2018 வரை நடைபெற்றது – தமிழகம் சார்பில் 24.10.2018 மற்றும் 25.10.2018 ஆகிய இரண்டு நாட்கள் தமிழக கிராமியக் கலை நிகழ்ச்சிகள் வழங்கியது – நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்–2) துறை

அரசாணை (ப) எண். 62

நாள்: 21–05–2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விகாரி வருடம், வைகாசி 7

படிக்கப்பட்டது

1. இமாசலப் பிரதேச மாநிலத்தின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின், நேர்முகக் கடித எண். LCD-C(10)–3/2018, நாள்:31.07.2018 (மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு முகவரியிட்ட கடிதம்)
2. கலை பண்பாட்டு ஆணையர் கடித ந.க. எண் 5870/இ1/2018, நாள் 12.09.2018 மற்றும் 21.03.2019

*****

ஆணை:-

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், இமாசலப் பிரதேசத்தின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இமாச்சலப் பிரதேசம் குல்லுவில் 2018 அக்டோபர் திங்கள் 19ஆம் தேதி முதல் 25ஆம் தேதி வரை "குல்லு தசரா விழா 2018" நடைபெறவுள்ளதாகவும், அவ்விழாவில் பல்வேறு மாநிலங்களின் பாரம்பரியமிக்க நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளதாகவும், இவ்விழாவிற்கு தமிழகத்திலிருந்து கலைக்குழுக்களை அனுப்பி வைத்து கலை நிகழ்ச்சிகள் நடத்தித் தருமாறும் தமிழ்நாடு அரசை கேட்டுக் கொண்டார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், இமாசலப் பிரதேசம் குல்லுவில், 19.10.2018 முதல் 25.10.2018 வரை நடைபெற்ற "குல்லு தசரா" விழாவில் தமிழக அரசின் கலை பண்பாட்டுத் துறை சார்பில் மதுரை மண்டலக் கலை பண்பாட்டு மையம் மூலம் 24.10.2018 மற்றும் 25.10.2018 ஆகிய இரண்டு நாட்கள் தமிழக பாரம்பரிய கிராமியக் கலை நிகழ்ச்சிகள் வழங்கியதற்கு கீழே அட்டவணையில் உள்ளவாறு ஏற்பட்ட உள்ளபடியான செலவினம் ரூ.5,45,000/–

தொகையினை நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு கலை பண்பாட்டு ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார் :-

| வ. எண் | செலவின விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | மதுரை – சென்னை – மதுரை பேருந்து கட்டணம் (20x1000) | 20,000/– |
| 2. | கோயம்பேடு – சென்ட்ரல் ரயில் நிலையம் வேன் வாடகை வேன் (2 x 2500) | 5,000/– |
| 3. | சென்னை–புதுதில்லி – சென்னை ரயில் பயணச் செலவு | 32,000/– |
| 4. | சென்னை ரயில் நிலையம் சுமைகூலி | 3,000/– |
| 5. | நிஜாமுதீன் ரயில் நிலையம் சுமைகூலி | 4,000/– |
| 6. | நிஜாமுதீன் ரயில் நிலையம் – தமிழ்நாடு இல்லம் வேன் வாடகை (2 x 2500) | 5,000/– |
| 7. | தமிழ்நாடு இல்லம் தங்குமிடம் மற்றும் உணவுச் செலவு (2நாட்கள்) (உள்ளபடியாக ஏற்பட்ட செலவினமான ரூ.15,080/–ஐ முழுமையாக்கி ரூ.15,000/– ஆக கணக்கிடப்பட்டுள்ளது) | 15,000/– |
| 8. | டெல்லி–குல்லு–டெல்லி போக்குவரத்து 2 வேன் வாடகை 5 நாட்கள் | 1,20,000/– |
| 9. | தமிழ்நாடு இல்லம் – புதுதில்லி ரயில் நிலையம் வேன் வாடகை 2 வேன் (2 x 2500) | 5,000/– |
| 10. | புதுதில்லி ரயில் நிலையம் சுமைகூலி | 4,000/– |
| 11. | சென்னை ரயில் நிலையம் சுமைகூலி | 3,000/– |
| 12. | சென்னை ரயில் நிலையம் – கோயம்பேடு வேன் வாடகை 2 வேன் (2 x 2500) | 5,000/– |
| 13. | தினப்படி 8 நாட்கள் (20 x 8 நாட்கள் x 400) (20.10.2018 முதல் 23.10.2018) (26.10.2018 முதல் 29.10.2018) | 64,000/– |
| 14. | 24.10.2018 மற்றும் 25.10.2018 ஆகிய இரு நாட்கள் கலை நிகழ்ச்சிகள் வழங்கிய 20 கலைஞர்களுக்கு இரண்டு நாட்களுக்கான மதிப்பூதியம், ஒத்திகை, ஒப்பனை, ஆடை அணிகலன்கள் மற்றும் இடை நிகழ் செலவுகள் ஆகிய செலவினங்களுக்காக (கலைஞர் ஒருவருக்கு நாளொன்றுக்கு ரூ.6,500/– செலவிடப்பட்டுள்ளது. (20 கலைஞர்கள் x ரூ.6,500/– x 2 நாட்கள்) | 2,60,000/– |
| | மொத்தம் | 5,45,000/– |

3. கலை பண்பாட்டு ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று, இமாசலப் பிரதேசம், குல்லுவில் 19.10.2018 முதல் 25.10.2018 வரை நடைபெற்ற “குல்லு தசரா” விழாவில் தமிழக அரசின் கலை பண்பாட்டுத் துறை சார்பில் மதுரை மண்டலக் கலை பண்பாட்டு மையம் மூலம் 24.10.2018 மற்றும் 25.10.2018 ஆகிய இரண்டு நாட்கள் தமிழக பாரம்பரிய கிராமியக் கலை நிகழ்ச்சிகள் வழங்கியதற்கு ஏற்பட்ட உள்ளபடியான செலவினம் ரூ.5,45,000/– க்கு (ரூபாய் ஐந்து இலட்சத்து நாற்பத்து ஐந்தாயிரம் மட்டும்) தொகைக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்:–

> "2205 00 கலையும் பண்பாடும் – 102 கலை மற்றும் பண்பாட்டை வளர்த்தல் – மாநிலச் செலவினங்கள் – JA கலைப் பணிகளுக்கான ஒரு மொத்த நிதி ஒதுக்கம் – 309. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை"
> (த.தொ.கு.2205 00 102 JA 30903)

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்க கலை பண்பாட்டு ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

6. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சாரா எண். 18091/நிதி(கல்வி–II)துறை / 2019, நாள் 06.05.2019–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

அபூர்வ வர்மா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர் , கலை பண்பாட்டுத் துறை, சென்னை–8.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–9. (இருபடிகள்)
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (A&E), சென்னை–18.
உள்ளுரை தணிக்கை அலுவலர்,
முதன்மை கணக்காய்வுத் தலைவர்(பொது மற்றும் சமூக பகுதி) அலுவலகம், சென்னை–9.
உதவி இயக்குநர், மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை

<u>நகல்:-</u>
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு அமைச்சர், (தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாடு) அலுவலகம், சென்னை–9
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை–9.
நிதி(கல்வி–II)த் துறை, சென்னை–9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(பண்–1/பொது) துறை, சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

21/05/19

பிரிவு அலுவலர்